**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 134/2022**

இன்று 2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஸ்வநாதன் |
| தந்தை பெயர் | : | சென்னிமலை கவுண்டர் |
| வயது | : | 67 |
| கிராமம் | : | செரங்காடு |

---

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 77 of 1969) on the 12.09.2024

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நாச்சியப்ப கவுண்டரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்காக தான் தாவா தாக்கல் செய்துள்ளேன். எனது தாயார் பெயர் சுப்பாத்தாள். அவருக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் சுப்பாத்தாள் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சென்னிமலை கவுண்டரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தாயாரின் சகோதரி பாப்பம்மாள் மற்றும் அவருடைய கணவர் பழனிச்சாமியின் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நாச்சியப்ப கவுண்டர் முதல் விசாரணை வாக்குமூலத்திலுள்ள முகவரியில் வசித்து வந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாச்சியப்ப கவுண்டரின் வாரிசுகள் தான் என் தாயாரும், என் சித்தியும் என்பதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நாச்சியப்ப கவுண்டரின் வாரிசு சான்றிதழ் சொத்தில் பாகம் கோர தேவைப்படுகிறது.

3) நாச்சியப்ப கவுண்டர் பெயரிலுள்ள சொத்துக்கள் தற்போது யார் வசமுள்ளது என்றால் வில்லங்கம் பார்க்கவில்லை. நாச்சியப்ப கவுண்டரின் மகன்கள் வசமுள்ளது. நாச்சியப்ப கவுண்டரின் 6 மகன்களும் இறந்து விட்டார்கள். நாச்சியப்ப கவுண்டரின் 6 மகன்கள்

மற்றும் என் தாயார் இருப்பது போல் புகைப்படம் என்னிடமில்லை. 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேன். சுப்பாத்தாள் மற்றும் பாப்பம்மாளுக்கு வாதிகள் வாரிசு என்பதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளார்கள் என்றால் தெரியாது.

4) நாச்சியப்ப கவுண்டருக்கு 2 பெண் வாரிசுகள் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாச்சியப்ப கவுண்டருக்கு மொத்தம் 6 மகன்கள். நாச்சியப்ப கவுண்டருக்கு மொத்தம் 7 மகன்கள் என்றும் அதில் ஒரு மகனான பழனிச்சாமி அவருக்கு திருமணம் இல்லாமல் இறந்து விட்டார் என்றால் அது நடந்த விவரம் எனக்கு தெரியாது. நாச்சியப்ப கவுண்டரும் அவரது 6 மகன்களும் இறந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் 1957 ம் வருடம் பிறந்தேன்.

5) நாச்சியப்ப கவுண்டருக்கு எந்த வகையிலும் என் தாயாரும் நானும் வாரிசுகள் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நாச்சியப்ப கவுண்டரின் வம்சத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யாததால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தான் நாச்சியப்ப கவுண்டரின் சொத்தில் வந்த பாகத்தை வைத்துள்ளார் என்றும் மற்ற 5 மகன்களின் வாரிசுகள் 3ம் தரப்பினருக்கு விற்பனை செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. யாரிடம் எந்த காலையில் எவ்வளவு விஸ்தீரணமுள்ள பூமி உள்ளது என்ற விவரம் தெரியாது.

6) நாச்சியப்ப கவுண்டரின் மற்ற வாரிசுகள் இடையே பல வழக்குகள் நடப்பது தெரிந்து கொண்டு அந்த வழக்குகளில் தரப்பினர் சொல்வதை கேட்டு தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். க.ச.எண்.478 ஐ பொறுத்து தாவா நடக்கிறது. தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/–திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.